admin@dhinakani.com

RNI-TNTAM/2023/88253

தின கனி காலை நாளிதழ்

நமது தினகனி

NAMADHU DHINA KANI

www.dhinakani.com

காலை நாளிதழ்

மலர்:03 | இதழ்:241 | 4 பக்கங்கள் | 30:03:2026 | திங்கட்கிழமை | விலை ரூ,6 | வருடசந்தா ரூ,1825

மாவட்டம் & தாலுகா வாரியாக நிருபர்கள் புகைப்பட கலைஞர்கள் தேவை

Call : 044-2272060 9443699066







அருட்செல்வம் செல்வத்துள் செல்வம்
பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

**விளக்கம்:**

செல்வத்துள் வைத்துச் செல்வமாவது அருளுடைமையாகிய செல்வமாம்; பொருட்செல்வமானது கீழாயினோர்மாட்டும் உளவாதலால். இஃது அருள்நிலை கூறிற்று.

## "கேரள மக்களின் ஆசியுடன் நாங்கள் ஆட்சி அமைப்போம்" - பிரதமர் மோடி



பாலக்காடு: "கேரளம் ஒரு மாற்றத்திற்கான செய்தியை அனுப்பி வருகிறது. கேரளத்தின் மனநிலை இப்போது ஒரு மக்கள் இயக்கமாகவே மாறிவிட்டது. கேரள மக்களின் ஆசியுடன் நாங்கள் ஆட்சி அமைப்போம்" என பிரதமர் மோடி தெரிவித்தார்.

பாலக்காட்டில் இன்று நடைபெற்ற பாஜகவின் தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டத்தில் உரையாற்றிய பிரதமர் மோடி, "எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் கொள்ளையடிக்கும் பங்குகளை தங்களுக்குள் பிரித்துக்கொண்டு, பல தசாப்தங்களாக கேரளாவைச் சூறையாடி வருகின்றன. சில ஆண்டுகள் எல்டிஎஃப் ஆட்சி நடத்தித் தங்கள் பைகளை நிரப்பிக்கொள்வது என்றும், பின்னர் அடுத்த சில ஆண்டுகள் யுடிஎஃப் ஆட்சி செய்து கொள்ளையடிப்பது என்றும் இவற்றுக்கிடையே ஒரு மறைமுகப் புரிதல் இருந்து வருகிறது. நமது கேரளம் இவர்களின் இந்தக் கூட்டணிப் பிடியில் சிக்கிக்கொண்டு தவிக்கிறது.

பல தசாப்தங்களாக எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் பல்வேறு ஊழல் முறைகேடுகளுக்கு மத்தியிலும் அதிகாரத்தைப் பரிமாறிக்கொண்டு வருகின்றன. ஆனால், ஒன்றுக்கொன்று எதிராக ஒருபோதும் நடவடிக்கை எடுத்ததில்லை; மாறாக, மக்கள் முன்னிலையில் வெறும் வெற்று வாக்குறுதிகளை மட்டுமே அளித்து வருகின்றன. கேரளத்தில் ஏற்படவுள்ள மாற்றமானது, மக்களின் ஆசிர்வாதம், பாஜக தொண்டர்களின் அயராத உழைப்பு மற்றும் அவர்களின் தியாகங்கள் ஆகியவற்றின் மூலமே சாத்தியமாகிறது. பாஜக கேரளாவை ஒரு வளர்ந்த மாநிலமாக மாற்றிக்காட்டும். மோடியின் உத்தரவாதங்கள்' எனும் வலிமையின் துணையோடு இம்மாநிலம் முன்னேறிச் செல்லும். சட்டமன்றத் தேர்தலைப் பொறுத்தவரை, பாஜகவே களத்தில் உள்ள 'முன்னணி அணி' (A-team) என்பதை எல்டிஎஃப் மற்றும் யுடிஎஃப் ஆகிய இரு அணிகளுமே ஒப்புக்கொண்டுள்ளன.

கேரளம் பல ஆண்டுகளாக, சுயநல அரசியல் எனும் இருவேறு முகமூடிகளுக்கு இடையில் சிக்கித் தவிக்கிறது. ஒருபுறம் கம்யூனிஸ்டுகள், மறுபுறம் காங்கிரஸ்; ஒன்று ஊழல் நிறைந்தது என்றால், மற்றொன்று அதைவிடப் பெரும் ஊழல் நிறைந்தது; ஒன்று வகுப்புவாதச் சிந்தனை கொண்டது என்றால், மற்றொன்று அதைவிடத் தீவிரமான வகுப்புவாதச் சிந்தனை கொண்டது.

இரு கூட்டணிகளின் அனைத்துக் கொள்கைகளும் வாக்கு வங்கி அரசியலுக்காக மட்டுமே உள்ளன. கேரளத்தின் வளர்ச்சியில் அவர்களுக்கு எவ்வித அக்கறையும் இல்லை. பாஜகவின் என்டிஏ கூட்டணியால் மட்டுமே மக்களின் விருப்பங்களை நிறைவேற்றவும், வளர்ச்சியை உறுதி செய்யவும் முடியும்.

பாஜக தலைமையிலான அரசாங்கம் கேரளத்தை மிக விரைவிலேயே ஒரு வளர்ச்சியடைந்த கேரளமாக மாற்றும். பாஜக அரசு ஒரு வளர்ச்சியடைந்த கேரளத்தை உருவாக்கும் என்று நான் இப்போது உங்களுக்கு உறுதியளிக்கிறேன். இது மோடியின் உத்தரவாதம்.

இந்த முறை கேரளத்தில் ஒரு மாறுபட்ட சூழலை நான் காண்கிறேன். கேரளம் ஒரு மாற்றத்திற்கான செய்தியை அனுப்பி வருகிறது. இன்று நீங்கள் வெளிப்படுத்தும் உற்சாகமும் ஆதரவு மற்றும் நீங்கள் இவ்வளவு திரளாக இங்கே கூடியிருப்பது ஆகிய அனைத்தும் பாஜகவின் மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை காட்டுகிறது. கேரளத்தின் மனநிலை இப்போது ஒரு மக்கள் இயக்கமாகவே மாறிவிட்டது என்பதையே காட்டுகின்றன. கேரள மக்களின் ஆசியுடன் நாங்கள் ஆட்சி அமைப்போம், அதனை இந்த மக்களின் எழுச்சி காட்டுகிறது" என்றார்.

## ஸ்டாலினை புகழ்ந்து பேசும் ரஜினிகாந்த் வீடியோ; பிரசாரத்தில் பயன்படுத்தும் தி.மு.க




முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் அரசியல் பண்பு, ஒழுக்கம் மற்றும் ஆளுமை குறித்து மெகா ஸ்டார் ரஜினிகாந்த் ஒரு நிகழ்ச்சியில் நெகிழ்ந்து பேசிய வீடியோவை, தி.மு.க தேர்தல் பிரசார விளம்பரமாக யூடியூப் மற்றும் ஓ.டி.டி தளங்களில் வெளியிட்டுள்ளது. முதலமைச்சர் மு.க. ஸ்டாலினின் அரசியல் பண்பு, ஒழுக்கம் மற்றும் ஆளுமை குறித்து மெகா ஸ்டார் ரஜினிகாந்த் ஒரு நிகழ்ச்சியில் நெகிழ்ந்து பேசிய வீடியோவை, தி.மு.க தேர்தல் பிரசார விளம்பரமாக யூடியூப் மற்றும் ஓ.டி.டி தளங்களில் வெளியிட்டுள்ளது.

# 100% வாக்குப்பதிவை வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி - செங்கல்பட்டு ஆட்சியர் துவக்கிவைப்பு

*செங்கல்பட்டு: மார்ச்,30*

செங்கல்பட்டு 2026 சட்டப்பேரவைத் தேர்தலில் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியிலிருந்து மாமல்லபுரம் வரை சுமார் 35 கி.மீ தூரம் 11,800 பேர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் எஸ். மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.




இதுகுறித்து அரசு வெளிட்டுள்ள அறிக்கையில், ' செங்கல்பட்டு மாவட்டம், சோளிங்கநல்லூர் செயின்ட் ஜோசப் பொறியியல் கல்லூரியில் இருந்து பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களின் மிதிவண்டி விழிப்புணர்வு பேரணியையையும், விழிப்புணர்வு சுடர் விளக்கினையும் தேர்தல் அலுவலரும், மாவட்ட ஆட்சித் தலைவருமான மாலதி ஹெலன் கொடியசைத்து துவக்கிவைத்தார்.

அதனை தொடர்ந்து 100 சதவிகித வாக்குபதிவை வலியுறுத்தி கல்லூரி கூட்டரங்கில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இப்பேரணி 5 கி.மீ பயணித்து திருப்போரூர் தொகுதிக்குட்பட்ட படூர் ரவுண்டானாவை சென்றடைந்தது. அங்கு தேர்தல் வழிப்புணர்வு சுடர்விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு தயார் நிலையில் இருந்த பொதுமக்கள், மாணவ மாணவியர்கள் 100 நபர்களின் இருசக்கர மோட்டார் வாகன அணிவகுப்பினை கொடியசைத்து துவக்கிவைத்தார்.

மாவட்ட ஆட்சித்தலைவர் வழிநடத்தி சென்ற வாகன பேரணி கேளம்பாக்கத்தில் முடிவடைந்தது. அங்கு தேர்தல் விழிப்புணர்வு சுடர் விளக்கை பெற்றுக்கொண்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அங்கு 50 மூன்று சக்கர ஆட்டோ தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள்.

அதனை தொடர்ந்து, திருப்போரூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கோவளத்தில் மகளீர் சுய உதவிக்குழுவினரின் 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தி நடத்தப்பட்ட தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட ஆட்சித் தலைவர் பார்வையிட்டார்.

அதன் பின்னர், 50 நான்கு சக்கர மகிழுந்துகளின் தேர்தல் விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கிவைத்தார்கள். தொடர்ந்து மாமல்லபுரத்தில் நடைபெற்ற படகுகள் மூலம் மீனவர்கள் நடத்திய தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சியினை தேர்தல் ஆட்சியர் பார்வையிட்டார். மேலும் 100 சதவிகித வாக்குபதிவினை வழியுறுத்தி அமைக்கப்பட்டிருந்த தேர்தல் விழிப்புணர்வு மணல் சிற்பத்தினை ஆட்சியர் பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து 100 சதவிகித வாக்குப் பதிவினை வலியுறுத்தி மாமல்லபுரத்தில் பல்வேறு தேர்தல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. மேலும், "எனது வாக்கு எனது பெருமை" என்ற தேர்தல் விழிப்புணர்வு வாசகங்கள் ஒட்டப்பட்ட அரசு பேருந்துகளை ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கணேஷ்குமார், துணை ஆட்சியர் (பயிற்சி) மணியரசன், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி முகமை) ஸ்ரீதேவி, ஊரக வளர்ச்சி(மகளீர் திட்டம்) திட்ட இயக்குநர் லோகநாயகி உள்ளிட்டோர் கலந்துக்கொண்டனர்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சமயபுரம் கோயிலில் மேற்கூரை இடிந்து விழுந்து பெண் பக்தர் உயிரிழப்பு



*திருச்சி: மார்ச்,30*

திருச்சி சமயபுரம் கோயில் நுழைவு மண்டபத்தில் மேற்கூரை இடிந்து விழுந்ததில் பெண் பக்தர் உயிரிழந்தார். காயமடைந்த தாய், மகள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சமயபுரம் மாரியம்மன் கோயில் பூச்சொரிதல் விழா கடந்த நான்கு வாரங்களாக நடைபெற்று வருகிறது. மாசி மாதம் கடைசி ஞாயிறு தொடங்கி பங்குனி மாதம் கடைசி ஞாயிறு வரை பக்தர்கள் பச்சைபட்டினி விரதம் இருப்பர். இதில் வாரம்தோறும் ஞாயிறு கிழமை அன்று பூச்சொரிதல் விழா விமரிசையாக நடைபெறும். அன்றைய தினம் உள்ளூர், வெளியூர் பக்தர்கள் பூக்களை கொண்டு வந்து அம்மனுக்கு சாற்றி வழிபடுவர். அந்த வகையில் இன்று 4வது பூச்சொரிதல் விழா நடைபெற்றது.

இதற்காக உள்ளூர், வெளி மாவட்ட பக்தர்கள் நேற்று இரவே கோயிலுக்கு வந்து தங்கினர். திருவையாறு, செபாஸ்தியார் கோயில் தெருவைச் சேர்ந்த மோகன் மனைவி நதியா (32), அவரது உறவினர்கள் தஞ்சாவூர், கள்ளப்பெரம்பூர், மாதாக்கோயில் தெருவைச் சேர்ந்த சண்முகசுந்தரம் மனைவி ரஞ்சனி (35), இவது மகள் பப்பிக்ஷா (14) ஆகியோர் கோயிலுக்கு நேற்று இரவு வந்துள்ளனர்.

இன்று காலை அம்மனை தரிசனம் செய்வதற்காக கோயில் சன்னதி வீதியில் உள்ள நுழைவு வாயில் மண்டபத்தில் படுத்து உறங்கிக் கொண்டிருந்தனர். அப்போது அங்கு படுத்து உறங்கிக் கொண்டிருந்த நதியா உள்ளிட்ட மூன்று பெண் பக்தர்கள் மீது மண்டபத்தின் கான்கிரீட் மேற்கூரை சுவர் இடிந்து விழுந்தது.

இதில் சம்பவ இடத்திலேயே நதியா பரிதாபமாக உயிரிழந்தார். ரஞ்சனி, பாபிக்ஷா பலத்த காயமடைந்தனர். உடனடியாக அருகில் இருந்த மற்ற பக்தர்கள் ரத்த வெள்ளத்தில் கிடந்த இருவரையும் மீட்டு 108 ஆம்புலன்ஸ் உதவியுடன் திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து தகவலறிந்த சமயபுரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் தண்டபானி தலைமையிலான போலீஸார் அங்கு விரைந்து வந்து நதியாவின் உடலை பிரேத பரிசோதனைக்காக ஸ்ரீரங்கம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இதுகுறித்து சமயபுரம் போலீஸார் வழக்குப்பதிவு செய்து விசாரிக்கின்றனர். சமயபுரம் கோயில் இணை ஆணையர் சூரியநாராயணன் மற்றும் கோயில் அலுவலர்கள் அங்கு விரைந்து சென்று சம்பவ இடத்தை பார்வையிட்டனர். ரத்தம் படிந்திருந்த தரையை சுத்தம் செய்தனர். இச்சம்பவத்தை தொடர்ந்து கோயிலின் கிழக்கு வாசல் நுழைவு வாயில் மண்டபப் பகுதி பேரி கார்டு வைத்து அடைக்கப்பட்டது. வடக்கு வாசல், தெற்கு வாசல் வழியாக பக்தர்கள் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். மேற்கு வாசல் வழியாக பக்தர்கள் வெளியே செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## அம்பத்தூர் அருகே உரிய ஆவணங்களின்றி வீட்டிலிருந்த ரூ.1.22 கோடி பறிமுதல்



*ஆவடி: மார்ச்,30*

ஆவடி அம்பத்தூர் அருகே அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் உரிய ஆவணங்களின்றி வீட்டில் வைக்கப்பட்டிருந்த ரூ.1.22 கோடியை நேற்று முன் தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்தனர்.

தமிழக சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்களை அரசியல் கட்சியினர் விநியோகிப்பதை தடுக்கும் வகையில், திருவள்ளூர் மாவட்ட தேர்தல் அலுவலரின் கீழ் உள்ள கும்மிடிப்பூண்டி, மாதவரம், திருத்தணி உள்ளிட்ட 10 சட்டப்பேரவை தொகுதிகளில் தேர்தல் பறக்கும் படையினர், நிலை கண்காணிப்பு குழுவினர் தீவிர கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.அந்த வகையில், அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் அருகே அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் நேற்று முன் தினம் இரவு தேர்தல் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர வாகன சோதனையில் ஈடுபட்டனர். அப்போது, அவ்வழியே இரு சக்கர வாகனத்தில் வந்த இளைஞர் ஒருவர் நிற்காமல் வேகமாக சென்று, அப்பகுதியில் உள்ள வீட்டின் முன் இரு சக்கர வாகனத்தை நிறுத்திவிட்டு, கைப்பையுடன் வீட்டினுள் நுழைந்தார். இதையடுத்து, அந்த இளைஞரை பின் தொடர்ந்து சென்ற தேர்தல் பறக்கும் படையினர் வீட்டினுள் புகுந்து, சோதனை நடத்தினர். அச்சோதனையில், கைப்பை மற்றும் வீட்டினுள் ரூ.1.22 கோடி இருந்தது.இதுகுறித்து, தேர்தல் பறக்கும் படையினர் தீவிர விசாரணை நடத்தினர். அவ்விசாரணையில் தெரிய வந்ததாவது: அண்ணா நகர் மேற்கு விரிவு, கோல்டன் குடியிருப்பு பகுதியில் வசிக்கும் மஞ்சுநாத் என்ற இளைஞர், டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை பணத்தை வசூலித்து, வங்கியில் செலுத்தும் நிறுவன ஊழியர். அவர் முகப்பேர் பகுதியில் உள்ள டாஸ்மாக் மதுபான கடைகளில் விற்பனை தொகையை வசூலித்த தொகையோடு, தான் வசிக்கும் பகுதிக்கு சென்று கொண்டிருந்துள்ளார். அப்போது, அச்சத்தின் காரணமாக தேர்தல் பறக்கும் படையினர் சோதனைக்கு ஒத்துழைக்காமல் இரு சக்கர வாகனத்தில் வேகமாக சென்றுள்ளார்.அவர் கைப்பை மற்றும் வீட்டினுள் வைத்திருந்த ரூ.1.22 கோடி டாஸ்மாக் மதுபான கடைகளின் விற்பனை தொகையாகும். இவ்வாறு அந்த விசாரணையில் தெரியவந்தது. இருப்பினும், ரூ.1.22 கோடிக்கு உரிய ஆவணங்கள் இல்லாததால், அதனை தேர்தல் பறக்கும் படையினர் பறிமுதல் செய்து, அம்பத்தூர் சட்டப்பேரவை தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலரும், பெருநகர சென்னை மாநகராட்சியின் அம்பத்தூர் மண்டல உதவி ஆணையருமான ஆர்.ஏ. பிரபாகரிடம் ஒப்படைத்தனர்.



காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சோனியா காந்தி உடல் நலக்குறைவு காரணமாக டெல்லி மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்பூரண குணமடைய வேண்டி திருவள்ளூரில் காங்கிரஸ் கட்சியினர் வீரராகவ பெருமாள் கோவிலில் சிறப்பு வழிபாடு.,காங்கிரஸ் மூத்த தலைவர் சோனியா காந்தி உடல் நலக்குறைவால் டெல்லியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.இந்த நிலையில் காங்கிரஸ் கட்சியின் திருவள்ளூர் வடக்கு மாவட்ட வழக்கறிஞர் வெங்கத்தூர் ஆர். சசிகுமார் தலைமையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வரும் காங்கிரஸ் கட்சி மூத்த தலைவர் சோனியா காந்தி பூரண உடல்நலம் பெற வேண்டி திருவள்ளூரில் உள்ள வைத்திய வீரராகவ பெருமாள் கோவிலில் சிறப்பு அபிஷேகம், சிறப்பு வழிபாடு செய்யப்பட்டது. நிகழ்ச்சியில் காங்கிரக் கட்சியின் மாநில நிர்வாகிகள் திவாகர்,டி.எஸ். இளங்கோவன், ஆனந்தன் மற்றும் திராணக் கட்சி நிர்வாகிகள் பலர் கலந்துக் கொண்டனர்.

## ஊத்தங்கரை சட்டமன்ற தொகுதி அதிமுக வேட்பாளர் டி.எம். தமிழ் செல்வம் எம்.ஜி.ஆர். சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை



ஊத்தங்கரை, மார்ச். 30–

அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஊத்தங்கரை (தனி) சட்டமன்றத் தொகுதி அதிமுக வேட்பாளராக டி.எம் தமிழ் செல்வத்தை அறிவித்துள்ளார். அதனைத் தொடர்ந்து அதிமுக வேட்பாளர் தமிழ்செல்வம் ஊத்தங்கரை நான்கு முனை சந்திப்பில் கூட்டணி கட்சி நிர்வாகிகளுடன் எம்.ஜி.ஆர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனைத் தொடர்ந்து மறைந்த தலைவர்கள்அம்பேத்கர்அண்ணா உள்ளிட்ட மறைந்த தலைவர்களின் திருவுருவ சிலைக்கு மாலை அணிவித்தார். அதிமுக வேட்பாளர் தமிழ்செல்வம் மத்தூர் அடுத்த தர்மதோப்பு கிராமத்தைச் சேர்ந்தவர் ஏற்கனவே ஊராட்சி மன்ற துணைத் தலைவராகவும் இரண்டு முறை ஒன்றிய கவுன்சிலராகவும் பதவி வகித்துள்ளார்.

தற்பொழுது பொதுக்குழு உறுப்பினராகவும் முன்னால் சட்டமன்ற உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். வேட்பாளர் தமிழ் செல்வத்திற்கு கூட்டணி கட்சி சார்ந்த நிர்வாகிகள் சால்வை அணிவித்து வாழ்த்துக்கள் தெரிவித்தனர். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கிருஷ்ணமூர்த்தி, மாவட்ட துணைச் செயலாளர் சாகுல் அமீது, நகர செயலாளர் சிக்னல் ஆறுமுகம், ஒன்றிய செயலாளர்கள் திருஞானம்,வேடி,கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட மருத்துவர் அணி செயலாளர் மருத்துவர் இளையராஜா, வேங்கன், நகர மாணவரணி செயலாளர் சம்பத் என்கிற கணேசன், வஜ்ரவேல், ரமேஷ், ஆடிட்டர் லோகநாதன்,பாரதிய ஜனதா கட்சி மாவட்ட செயலாளர் மகாராஜன், மண்டல சக்தி கேந்திர பொறுப்பாளர் பொன்ராஜ், மாவட்ட துணைத் தலைவர்கள் சிவக்குமார், தாமோதரன், மாவட்ட மகளிர் அணி தலைவி சிலம்பொலி இசை உள்ளிட்ட பாரதிய ஜனதா கட்சி, அம்மா மக்கள் முன்னேற்ற கழகம், பாட்டாளி மக்கள் கட்சி உள்ளிட்ட கூட்டணி கட்சி சேர்ந்த ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர்.



விழுப்புரம் வடக்கு மாவட்ட செஞ்சி சட்டமன்றத் தொகுதியில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி திமுக சார்பில், விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளரும் முன்னாள் அமைச்சருமானசெஞ்சிகே..எஸ்.மஸ்தான்சட்டமன்றஉறுப்பினராக,திமுகதலைமையில், தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். இதையடுத்து, செஞ்சியில் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் வழக்கறிஞர் விஜயகுமார் தலைமையில், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மக்தியார் அலி, பொதுக்குழு உறுப்பினர் வழக்கறிஞர் மணிவண்ணன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, நகர செயலாளர் கார்த்தி, முன்னாள் தலைமைஆசிரியைதிலகவதி,கவுன்சிலர்சங்கர்,எம்.பி.ஆர்.மோகன்,எஸ்.எஸ்.சீனிவாசன் பொன்னம்பலம், மற்றும் கட்சியினர் பட்டாசு வெடித்து பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கி கொண்டாடினர்.இதில்சட்டமன்றதொகுதிமதச்சார்பற்றமுற்போக்குகூட்டணிகட்சிகளின் நிர்வாகிகள், கூட்டணி கட்சியினர் கலந்து கொண்டனர். செஞ்சி சட்டமன்ற தொகுதியில் திமுக சார்பில் மூன்றாவது முறையாக விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்எல்ஏ போட்டியிடுவது குறிப்பிடத்தக்கது.



திருவாரூர் மாவட்டம் மன்னார்குடி கழக மாவட்டத்திற்கு உட்பட்ட திருத்துறைப்பூண்டி சீனிவாசராவ் நினைவு மண்டபம் அருகில் திராவிடர் கழகம் சார்பில் பட்டுக்கோட்டை அஞ்சா நெஞ்சன் அழகிரி அவர்களின் 77 ஆம் ஆண்டு நினைவு நாள் பரப்புரை பிரச்சாரக் கூட்டம்சிறப்பாகநடைபெற்றது.இந்தகூட்டத்தில்நகரத்தலைவர்சு.சித்தார்த்தன்அவர்கள் தலைமையில் மாவட்ட தலைவர் ஆர்.பி.எஸ்.சித்தார்த்தன், மாவட்ட செயலாளர் சு.கிருஷ்ணமூர்த்தி மாநில இளைஞரணி துணை செயலாளர் அ.ஜெ.உமாநாத் பொதுக்குழு உறுப்பினர்எஸ்.அன்பழகன்,பகுத்தறிவாளர்கழகசெயலாளர்ரமேஷ்ஆகியோர்முன்னிலை ஏற்றனர். இந்தக் கூட்டத்தில் தலைமை கழக சொற்பொழிவாளர் பூவை.புலிகேசி அவர்கள் பட்டுக்கோட்டைஅஞ்சாநெஞ்சன்அழகிரிஅவர்களின்புகழையும்,திராவிடஇயக்கத்திற்கு அவர் ஆற்றிய அர்ப்பணிப்பையும் நினைவு கூர்ந்து உரையாற்றினார். வருகின்ற சட்டமன்ற தேர்தலில் ஸ்டாலின் தலைமையிலான மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிக்கு வாக்குகளை செலுத்த வேண்டும், அதனால் தான் நாட்டில் அமைதி நிலவும் எனவும் குறிப்பிட்டார். நிறைவாக நகர செயலாளர் நாகராஜன் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி கூறினார்.

### திருவண்ணாமலை மாவட்டத்தில்

## வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை கலெக்டர் பார்வையிட்டார்





திருவண்ணாமலை, மார்ச். 30–

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் தமிழ்நாடு சட்ட மன்ற பொதுத்தேர்தல்2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்குச் சாவடி அலுவலர்களுக்கானமுதற்கட்டபயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர்க.தர்ப்பகராஜ், (28.03.2026) அன்று திருவண்ணாமலைமாநகராட்சி சோ.கீழ்நாச்சி ப்பட்டு பகுதியிலுள்ள காந்தி நகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 நடைபெறவுள்ளதை முன்னிட்டு வாக்குச்சாவடி அலுவலர்களுக்கானமுதற்கட்டபயிற்சி வகுப்பு நடைபெற்று வருவதை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 8 சட்டமன்ற தொகுதிகளில் 2516 வாக்குச் சாவடி மையங்களில் 23.04.2026 அன்று வாக்குப் பதிவு நடைபெறவுள்ளது. இம்மையங்களில் பணிபுரிவதற்காக ஆசிரியர்கள் மற்றும் பல்வேறு துறைகளைச் சார்ந்த அலுவலர்கள் தேர்தல் பணியில் வாக்குச் சாவடி அலுவலர்களாக நியமிக்கப்பட்டு அவர்களுக்கான முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் செங்கம் இராமகிருஷ்ணா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 1344 நபர்களுக்கும், தண்டராம்பட்டு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 837 நபர்களுக்கும், திருவண்ணா மலை காந்திநகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2360 நபர்களுக்கும். கீழ்பென்னா த்தூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் மெட்ரிகுலேசன்பள்ளியில் 844 512 நபர்களுக்கும், கலசப்பாக்கம் செழியன் நபர்களுக்கும், போளூர் அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1005 நபர்களுக்கும், சேத்துப்பட்டு அரசு மேல்நிலைப்பள்ளியில் 724 நபர்களுக்கும்,ஆரணிசுப்பிரமணி சாஸ்திரியார் மேல்நிலைப் பள்ளியில் 1147 நபர்களுக்கும், செய்யார் அறிஞர் அண்ணா கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் 1272 நபர்களுக்கும், வெம்பாக்கம் மீனாட்சியம்மன் பொறியியல் கல்லூரியில் 507 நபர்களுக்கும். வந்தவாசி அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1240 நபர்களுக்கும், ஜமுனாமரத்தூர் செயிண்ட் ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் 284 நபர்கள் என மொத்தம் 12076 வாக்குசாவடி அலுவலர்களுக்கு 12 மையங்களில் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

இப்பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட வாக்குச்சாவடி அலுவலர்கள் தங்களது அஞ்சல் வாக்கு செலுத்தும் முறைகள் குறித்தும், வாக்குச் சாவடியில் தலைமை அலுவலரின் பணிகள் குறித்தும் எடுத்துரைக்கப்பட்டது. மேலும், வாக்குச் சாவடி தலைமை அலுவலர் மற்றும் அலுவலர்கள் வாக்குப்பதிவு இயந்திரங்கள் கையாளும்முறைகுறித்தும், வாக்குப் பதிவிற்கு முந்திய நாள் வாக்குச் சாவடியில் மேற்கொள்ள வேண்டிய பணிகள், வாக்குப்பதிவு நாள் அன்று மேற்கொள்ள வேண்டிய பணிகள், மாதிரி வாக்குப்பதிவு செயல் முறை குறித்தும், வாக்குப்பதிவு இயந்திரங்கள் பழுது ஏற்படும் போது மேற்கொள்ள வேண்டிய விவரங்கள், வாக்குப்பதிவின் போது வாக்குச்சாவடி தலைமை அலுவலர் பூர்த்தி செய்யப்பட வேண்டிய படிவங்கள், ஆவணங்கள் மற்றும் வாக்குப்பதிவு முகவர்களுக்கான குறிப்புகள் தொடர்பாகவும் எடுத்துரைக்கப்பட்டது.

மேலும் திருவண்ணா மலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் காந்தி நகர் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளில் அமைக்கப்பட்ட மாதிரி வாக்குப்பதிவு மையத்தில் செயல்முறை குறித்து பயிற்சி நடைபெறுவதை ஆய்வு மேற்கொண்டார். அதனை தொடர்ந்து சோ.கீழ்நாச்சிப்பட்டு திண்டிவனம் சாலையில் பறக்கும் படையினர் வாகன தனிக்கை சோதனையில் ஈடுப்பட்டு வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின் போது திருவண்ணாமலை சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் செல்வம், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், திருவண்ணாமலை வட்டாட்சியர் மோகன்ராமன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வேலூர் கலெக்டர் தலைமையில் 1000 பேர் பங்கேற்ற தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி மற்றும் பேரணி





வேலூர். மார்ச், 30

தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் வருகின்ற 23.04.2026 அன்று நடைபெற உள்ளது என இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ளது. நடைபெற இருக்கின்ற தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தலில் வேலூர் மாவட்டத்தில் மொத்தம் உள்ள 13,03,3000 வாக்காளர்களில் 100% தங்களுடைய வாக்கினை செலுத்தும் வகையில் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்டம் முழுவதும் தொடர்ந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது.

குறிப்பாக மாவட்டத்தில் உள்ள 5 சட்டமன்ற தொகுதிகளிலும் சம்பந்தப்பட்ட தேர்தல் நடத்தும் அலுவலர், விழிப்புணர்வு ஒருங்கிணைப்பு அலுவலர்கள், ஊரக வளர்ச்சித் துறையின் வட்டார வளர்ச்சி அலுவலர்கள். பணியாளர்கள், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மகளிர் சுய உதவி குழுவினர் போன்ற பல்வேறு துறை சார்ந்த பணியாளர்களின் வாயிலாக தேர்தல் விழிப்புணர்வு வண்ண கோலங்கள் வரைதல், வாக்காளர் உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல், பொது மக்கள் அதிகம் கூடும் பகுதிகளான பேருந்து நிலையங்கள் மற்றும் மார்க்கெட் பகுதிகள், நகரங்களின் முக்கிய வணிகப் பகுதிகளில் விழிப்புணர்வு பேரணிகள் நடத்துதல் போன்ற விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு பகுதியாக நேற்று வேலூர் கோட்டை மைதானத்தில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்டத்தின் அங்கன்வாடி பணியாளர்கள். கல்லூரி மாணவ, மாணவிகள், மாநகராட்சி தூய்மை பணியாளர்கள் மற்றும் வருவாய் துறை பணியாளர்கள் என சுமார் 1000 நபர்கள் கலந்து கொண்ட விழிப்புணர்வு நிகழ்ச்சி வேலூர் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் வே.இரா.சுப்புலெட்சுமி, தலைமையில் நேற்று வேலூர் கோட்டை மைதானத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்ச்சியில் தோட்டக்கலைத் துறையின் சார்பில் "MY VOTE MY FUTURE" அதாவது "என் வாக்கு என் எதிர்காலம்" என்ற விழிப்புணர்வு வாசகத்தை குறிக்கும் வகையில் மலர்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.


தொடர்ந்து இந்நிகழ்ச்சியில் மாவட்ட தேர்தல் அலுவலர் வேலூர் மாவட்டத்தில் விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள "வேலூர் கோட்டையன்" எனும் தேர்தல் விழிப்புணர்வு இலட்சினை மற்றும் வாக்களிப்பதன் அவசியம் குறித்த தேர்தல் விழிப்புணர்வு குறும்படத்தினை அறிமுகப்படுத்தினார்.

இதனைத் தொடர்ந்து மாவட்ட தேர்தல் அலுவலர் தலைமையில் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட 1000 நபர்களும் கோட்டை மைதானத்தில் இருந்து வேலூர் பழைய பேருந்து நிலையம் வரை வாக்கு செலுத்துவதன் அவசியம் குறித்த பதாகைகளை கையில் ஏந்தி வாக்களிப்பதன் அவசியம் குறித்த வாசகங்களை உச்சரித்துக் கொண்டே பேரணியாக சென்றனர்.

இந்நிகழ்ச்சியில் கூடுதல் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட வருவாய் அலுவலர் மா. சிவசுப்பிரமணியன், வேலூர் வருவாய் கோட்டாட்சியர் செந்தில்குமார், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்கள் குணசேகரன்(பொது). பாஸ்கரன் (தேர்தல்) கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் திருகுணஐயப்பத்துரை, மாவட்ட சமூக நல அலுவலர் உமா மாவட்ட ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் மு.சாந்திபிரியதர்ஷினி, தோட்டக்கலை உதவி இயக்குனர் மணிகண்டன் தேர்தல் வட்டாட்சியர் ரமேஷ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026-ஐ முன்னிட்டு வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான தேர்தல் பயிற்சி வகுப்புகள்

### விழுப்புரம் மாவட்ட கலெக்டர் பார்வையிட்டார்



விழுப்புரம், மார்ச். 30–

விழுப்புரம் மாவட்டம், வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 முன்னிட்டு, வாக்குச் சாவடி தலைமை அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான (Polling Officer) தேர்தல் பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், (28.03.2026) அன்று நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்.

மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவிக்கையில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு, இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, ஏப்ரல் 23ஆம் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதையொட்டி, விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள 07 சட்டமன்ற தொகுதிகளில் வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான (Polling Officer) தேர்தல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது.

அந்த வகையில்,செஞ்சி சட்டமன்ற தொகுதிக்கு செஞ்சி அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் செஞ்சி ராஜாதேசிங்கு அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளிலும், மயிலம் சட்டமன்ற தொகுதிக்கு மயிலம், பவ்டா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், திண்டிவனம் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு திண்டிவனம், மான்ட்போர்ட் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளியிலும், வானூர் (தனி) சட்டமன்ற தொகுதிக்கு வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், விழுப்புரம் சட்டமன்ற தொகுதிக்கு டாக்டர் எம்.ஜி.ஆர் அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு லட்சுமிபுரம் விவேகானந்தா அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும், திருக்கோவிலூர் சட்டமன்ற தொகுதிக்கு திருக்கோவிலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியிலும் தேர்தல் பயிற்சி வகுப்புகள் நடைபெற்று வருகிறது.

அதனடிப்படையில், இன்றைய தினம், வானூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில், தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 முன்னிட்டு, வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான (Polling Officer) தேர்தல் பயிற்சி வகுப்புகள் நடைபெறுவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டதுடன், தேர்தல் பயிற்சி வகுப்புகளை நல்ல முறையில் பயன்படுத்தி பயிற்சி பெற்று தேர்தல் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள வேண்டும் என வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் (Presiding Officer) மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு (Polling Officer) அறிவுறுத்தப்பட்டது என மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர், தெரிவித்தார்.

ஆய்வின்போது, தனி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு தேசிய நெடுஞ்சாலை) ரவி, வானூர் தேர்தல் நடத்தும் அலுவலர் ராஜீ, வானூர் வருவாய் வட்டாட்சியர் வித்யாதரன் உட்பட பலர் உள்ளனர்.

# உலகப் பிரசித்தி பெற்ற திருவாரூர் ஆழித்தேரோட்டம்



திருவாரூர்:
பஞ்சபூத தலங்களில் பூமிக்கு உரிய தலமாகவும் சர்வதோஷ பரிகாரத் தல மாகவும் விளங்கும் திருவாரூர் தியாகராஜர் கோவிலின் ஆழித்தேரோட்டம் உலகப் பிரசித்தி பெற்றது. ஆசியாவிலேயே மிகப் பெரிய தேர் என போற்றப் படும் பெருமை மிக்கது. இந்த கோவிலின் பங்குனி உத்திர திருவிழா கடந்த மார்ச் 6ஆம் தேதி கொடியேற்றத்துடன் துவங்கிய நிலையில் திருவிழாவின் முக்கிய நிகழ்வான ஆழி தேரோட்டம் நடைபெற்றது.

திருவாரூர் தேர் 96 அடி உயரமும் 30 அடி அகலமும் 350 டன் எடையும் கொண்டதாகும். குறிப்பாக நான்கு ராட்சச இரும்பு சக்கரங்கரங்களையும் நிறுத்தும் வகையில் ஹைட்ராலிக் பிரேக் பொருத்தப்பட்டுள்ளது இதன் தனி சிறப்பு. சிறப்பு மிக்க இந்த ஆழித்தேரோட்டம் ஒவ்வொரு வருடமும் பங்குனி உத்திர திருவிழாவில் ஆயில்ய நட்சத்திரத்தில் வெகு விமர்சையாக நடைபெற்று வருகிறது.

அந்த வகையில் இந்த வருட ஆழித்தரோட்ட விழாவை முன்னிட்டு மார்ச் 28 இரவு தியாகராஜ சாமி அஜபா நடனத்தில் தேரில் எழுந்தருளினார். தொடர்ந்து இன்று அதி காலை விநாயகர் முருகன் தேர்கள் நான்கு வீதிகளிலும் வலம் வந்த நிலையில் தற்போது உலகப் பிரசித்தி பெற்ற ஆசியாவின் மிகப்பெரிய தேரான ஆழித் தேரோட்டம் தொடங்கியது. பல்லாயிரக்கணக்கான பொது மக்கள்பக்திபரவசத்துடன் ஆரூரா தியாகேசா என முழக்கமிட்டவாறு தேரை வடம் பிடித்து இழுத்தனர்.

இந்த தேரோட்ட விழாவில் தமிழகத்தின் பல் வேறு பகுதிகளில் இருந்தும் வெளி மாநிலங்களில் இருந்தும் வெளிநாடுகளில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தர்கள் வருகை புரிந்ததால் அசம்பாவிதங்களை தவிர்க்கும் வகையில் திருவாரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் தலைமையில் 1500 மேற் பட்ட போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். குறிப்பாக நகர் முழுவதும் சிசிடிவி கேமரா மற்றும் கண்காணிப்புகோபுரங்கள்மூலம் காவல்துறையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர். மேலும் திருவாரூர் நகராட்சி நிர்வாகம் சார்பில் தீயணைப்பு வாகனம் மருத்துவ குழு குடிநீர் உள்ளிட்ட பல்வேறு விரிவான முன்னேற்பாடுகள் மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டதுகுறிப்பிடத்தக்கது.

காலை தொடங்கிய ஆழி தேரோட்ட நிகழ்வு பக்தர்கள் மற்றும் டோசர் இயந்திரம் ஹைட்ராலிக் பிரேக் உதவியுடன் பாதுகாப்பாக கீழ வீதி பகுதியில் தொடங்கிய தேரோட்டம் தெற்கு வீதி மேல வீதி வடக்கு வீதி வழியாக திரும்பவும் கீழ வீதி தேர் நிலை நிறுத்தும் இடத்திற்கு பாதுகாப்பாக எவ்வித அசம்பாவிதமும் இன்றி இழுத்துவரப்பட்டு நிலை நிறுத்தப்பட்டது.

# ஊத்தங்கரை (தனி(சட்டமன்ற தொகுதி தவெக வேட்பாளராக பி.குமரவேல் அறிவிப்பு



தமிழக வெற்றிக்கழக தலைவர் விஜய் அவர்கள் தமிழகத்தில் உள்ள 234 தொகுதிகளுக்கும் வேட்பாளர்களை அறிவித்தார் அதனை தொடர்ந்து ஊத்தங்கரை(தனி)சட்டமன்றத்தொகுதிஊத்தங்கரைஅடுத்தசாலமரத்துப்பட்டி சார்ந்த பி.குமரவேல் அவர்களை வேட்பாளராக தமிழக வெற்றி கழக தலைவர் விஜய் அறிவித்துள்ளார் பி.குமரவேல் தமிழக வெற்றிக் கழகத்தில் இளைஞர் அணி இணை அமைப்பாளராக பதவி வகித்து வருகிறார் தமிழக வெற்றி கழக சார்ந்த நிர்வாகிகள் ஏராளமான அரசியல் பிரமுகர்கள் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் சால்வை அணிவித்து வாழ்த்துக்களை தெரிவித்து வருகின்றனர்

# கோயம்புத்தூர் மாயோனி ஞானவொளி பீடத்தில் மகளிர் தின விழா




கோயம்புத்தூர்:
கோயம்புத்தூர் மாவட்டம் பாப்பம்பட்டியில் அமைந்துள்ள ஞானவொளி பீடத்தில் மகளிர் தினவிழா சிறப்பாக நடைபெற்றது. போகர் தமிழ்ச் சங்கமும் மாயோனி ஞானவொளி பீடமும் இணைந்து நடத்திய மகளிர் தின நிகழ்ச்சிக்குச் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தலைமைக் காவலர் ஜி கவிதா பெண்கள் கல்வி கற்க வேண்டியதன் அவசியம் குறித்து எடுத்துரைத்தார். பெண்களுக்குக்கல்வி என்பது கண்களைப் போன்றது. கண்ணுடைய பெண்களுக்கு வாழ்க்கைப் பயணம் என்பது மிக எளிதாக அமைந்து விடு கின்றது. தன்னம்பிக்கை, சுயமரியாதை, சொந்த காலில் நிற்றல், தனித்துவமான ஆளுமை ஆகிய அனைத்தும் பெண்ணுக்குக் கிடைத்து விடுகின்றது. அது கல்வியின் மூலமே அதிகம் சாத்தியமாகிறது .

கல்விகற்காத பெண்கள் என்று யாரும் இருக்கக் கூடாது. எல்லோரும் கற்றவர்களாக வேண்டும். பெண்ணுக்கு நகையை விட, அழகைவிட, திருமணத்தை விட, ஆடம்பரத்தைவிடவும்கல்விதான் மிக மிக முக்கியம் மிகப் பெரிய சொத்து . தினந்தோறும் ஏதேனும் நல்ல செய்தியைப் படித்துக்கொண்டே இருங்கள். வாழ்வின் இறுதி நிமிடம் வரைக்கும் கற்றுக் கொண்டே இருக்க வேண்டும். கற்பதற்கு வயதில்லை.என்பதை மாயோனி எடுத்துரைத்தார். கோயம்புத்தூர் தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் இல. மணி கலந்து கொண்டு பேசியபோது குழந்தைகளுக்கு கட்டாயம் தமிழில் பெயர் வையுங்கள். தாய்மார்கள் தான் தாய் மொழியைக் காகக்கமுடியும் என்று கூறினார்.

சரண்யா வரவேற்புரை வழங்கினார் . நன்றியுரை சுமதி வழங்கினார். உறுப்பினர்கள் கிருஷ்ண பாரதி, கவுதமி, கிருஷ்ணவேணி, சிவராமகணேசன், இரத்தினமூர்த்தி, சிவக்குமார், மாரிமுத்து, சரண் ஹரி சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர். மாயோனி ஞானவொளி பீடத்தின் செயலாளர் கோவிந்தராஜ், போகர்தமிழ்ச்சங்கத்தின் பொருளாளர் சு.இராமமூர்த்தி ஆகியோர் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு செய்தனர்.

# போடி தொகுதியில் ஓ.பன்னீர்செல்வத்தை தோற்கடித்து வெற்றிக்கனியை எடப்பாடி பழனிச்சாமி காலடியில் சமர்ப்பிப்பேன்

## போடி தொகுதி அதிமுக வேட்பாளர் வி.டி.நாராயணசாமி பேச்சு

தேனி மாவட்டம் போடிநாயக்கனூர் சட்டமன்றத் தொகுதி வேட்பாளராக கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் வி.டி.நாராயணசாமி போட்டியிடுவார் என கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி அறிவித்துள்ளார். வி.டி. நாராயணசாமிக்கு தொகுதி முழுவதும் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் போடி தொகுதிக்குட்பட்ட சின்னமனூர் மேற்கு ஒன்றியம் எல்லப்பட்டியில் ஒன்றிய செயலாளர் எல்லப்பட்டி முருகன் தலைமையில் இன்று வேட்பாளர் அறிமுகக் கூட்டம் நடைபெற்றது. இதில் சின்னமனூர் மேற்கு ஒன்றியத்திற்கு உட்பட்ட அனைத்து பேரூர் மற்றும் கிளைக் கழக நிர்வாகிகள் மற்றும் கூட்டணி கட்சியினர் என முக்கிய நிர்வாகிகள் பங்கேற்றனர். இந்த நிகழ்வில் வேட்பாளர் வி.டி.நாராயணசாமி பேசும் போது,

அதிமுகவில் இருந்து தலைமைப் பதவி, முதலமைச்சர், அமைச்சர் என பல்வேறு பதவி சுகங்களை அனுபவித்து,இன்று தன்னை வளர்த்த இயக்கம் மற்றும் இரண்டரை கோடி தொண்டர்களுக்கு துரோகம் செய்துவிட்டு பதவி சுகத்திற்காக பரம எதிரியான திமுகவுடன் கைகோர்த்து, திமுக சின்னத்தில் துரோகி ஓ.பன்னீர்செல்வம் போட்டியிடுகிறார். துரோகம் ஒரு போதும் வென்றதாக சரித்திரமில்லை. நிச்சயமாக அந்த துரோகியை வீழ்த்தி போடி சட்டமன்றத் தொகுதியில் அமோக வெற்றி பெற்று அந்த வெற்றிக்கனியை எடப்பாடி பழனிச்சாமி கால்களில் சமர்பிப்பேன் என்று பேசினார்.



இந்த நிகழ்ச்சியில் மாநில அம்மா பேரவை துணைச் செயலாளர் சூரிய பிரசாத், மாவட்டத் துணைச் செயலாளர் சற்குணம், ஒன்றிய செயலாளர்கள் முத்துப்பாண்டி, பாண்டித்துரை, பொதுக்குழு உறுப்பினர் ஜெயச்சந்திரன், கூடலூர் நகர செயலாளர் அருண்குமார், பேரூர் கழகச் செயலாளர்கள், சென்றாய பெருமாள் பாண்டி, மாவட்ட சிறுபான்மையினர் பிரிவு செயலாளர் அப்துல் ஆசிக், கூடலூர் நகர துணை செயலாளர் பாளைராஜா மற்றும் பாஜக, அமமுக உள்ளிட்ட கூட்டணி கட்சியினர் என ஏராளமானோர் பங்கேற்றனர்.

# விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இன்று முதல் வேட்புமனு தாக்கல் செய்யலாம்

## மாவட்ட தேர்தல் அலுவலர் என்.ஓ.சுகபுத்ரா, தகவல்



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இன்று 30.03.2026 முதல் 06.04.2026 வரை வேட்புமனு தாக்கல் செய்யலாம் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ.சுகபுத்ரா, தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளதாவது:

வேட்புமனு தாக்கல் காலஅட்டவணைமற்றும் இடங்கள்: இந்திய தேர்தல் ஆணையத்தால் தேர்தல்அட்டவணைவெளியிடப்பட்டதைத் தொடர்ந்து, விருதுநகர் மாவட்டத்திலுள்ள 7 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இன்று 30.03.2026 (திங்கட்கிழமை) முதல் வேட்புமனுக்கள் பெறப்படும். வேட்பாளர்கள் காலை 11.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை அந்தந்த தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகங்களில் தங்கள் மனுக்களைத் தாக்கல் செய்யலாம். வேட்புமனு தாக்கல் நடைபெறும் இடங்கள்:

இராஜபாளையம்: இராஜபாளையம் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

ஸ்ரீவில்லிபுத்தூர் (தனி): ஸ்ரீவில்லிபுத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

சாத்தூர்: சாத்தூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் சாத்தூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

சிவகாசி: சிவகாசி சார் ஆட்சியர் அலுவலகம் மற்றும் சிவகாசி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

விருதுநகர்: விருதுநகர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

அருப்புக் கோட்டை: அருப்புக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் மற்றும் அருப்புக்கோட்டை வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

திருச்சுழி: திருச்சுழி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம்.

விடுமுறை நாட்கள் மற்றும் கடைசி நாள்:

1881 ஆம் ஆண்டு செலாவணி முறிச்சட்டத்தின் கீழ், அரசால் பொது விடுமுறை நாட்களாக அறிவிக்கப்பட்டுள்ள 31.03.2026 (செவ்வாய்க் கிழமை), 01.04.2026 (புதன்கிழமை), 03.04.2026 (வெள்ளிக்கிழமை)மற்றும்05.04.2026 (ஞாயிற்றுக்கிழமை) ஆகிய நாட்களில் வேட்புமனுக்கள் பெறப்படமாட்டாது.

வேட்புமனுக்களைத் தாக்கல் செய்வதற்கான கடைசி நாள் 06.04.2026 (திங்கட்கிழமை) ஆகும்.

பின்பற்ற வேண்டிய விதிமுறைகள்:

நபர்களின் எண்ணிக்கை: வேட்புமனு தாக்கல் செய்ய வரும்போது, வேட்பாளருடன் சேர்த்து மொத்தம் 5 நபர்கள் மட்டுமே தேர்தல் நடத்தும் அலுவலரின் அறைக்குள் செல்ல அனுமதி உண்டு.

வாகனக் கட்டுப்பாடு: தேர்தல் நடத்தும் அலுவலர் அலுவலகத்தின் 100 மீட்டர் சுற்றளவிற்குள் 3 வாகனங்கள் மட்டுமே அனுமதிக்கப்படும்.

பாதுகாப்பு ஏற்பாடுகள்: வேட்புமனு தாக்கல் நடைபெறும் அனைத்து அலுவலகங்களிலும் சிசிடிவி (CCTV) கேமராக்கள் பொருத்தப்பட்டு, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. எனவே, வேட்புமனு தாக்கல் செய்ய வருகிறவர்கள் தேர்தல் நடத்தை விதிகளை (Model Code of Conduct) கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் .என்.ஓ.சுகபுத்ரா, கேட்டுக்கொண்டுள்ளார்.




மதுரை சர்வேயர் காலனி பகுதியில் உள்ள தனியார் மஹாலில் தமிழ்நாடு மின் அமைப்பாளர்கள் மத்திய சங்கம் மதுரை மாவட்டம்கோ.புதூர்கிளைசார்பாக34ஆவது ஆண்டு விழாநடைபெற்றது.கோபுதூர்கிளைதலைவர்/மாவட்டசெயலாளர் ஆதீஸ்வரர் தலைமை தாங்கினார். கிளைச் செயலாளர் சங்கையா நிகழ்ச்சி வரவேற்று தொகு த்து வழங்கினார்.மாவட்ட பொருளாளர் சுப்ரமணி கிளை பொருளாளர் ஸ்ரீதரன் மதுரை மாவட்ட தலைவர் / மண்டல் தலைவர் ஆறுமுகம் மாநில கொள்கை பரப்புச் செயலாளர் நாகேஸ்வரன் மாநில அமைப்பு செயலாளர் யோகநாதன் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். தொடர்ந்து நடைபெற்ற இந்நிகழ்வில் புதிதாக உறுப்பினர்களை இணைப்பது, நலவாரியத்தில் பதிவு செய்து சலுகைகளை எவ்வாறு பெறுவது, அரசின் நலத்திட்ட உதவிகளை பெறுவது உள்ளிட்டவைகள் குறித்து பேசப்பட்டது.

# ஆற்காடு கங்காதர ஈஸ்வரர் ஆலயத்தில் தேரோட்ட விழா



ஆற்காடு,மார்ச்30
1000 ஆண்டு பழமையான கங்காதர ஈஸ்வரர் ஆலயத்தில் பங்குனி பிரம்மோற்சவத்தையொட்டி தேரோட்டம் திரளான பக்தர்கள் பங்கேற்று தேரினை வடம் பிடித்து இழுத்தனர். ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு அடுத்த தோப்புக்கனா பகுதியில், 1000 ஆண்டுகள் பழமையான கங்காதர ஈஸ்வரர் ஆலயத்தில் நேற்று பங்குனி பிரம்மோற்ச வத்தை முன்னிட்டு தேரோட்டமானது வெகு விமர்சையாக நடைபெற்றது.

ஆற்காடு அடுத்த தோப்புக்கனாபகுதியில் மிகவும் பழமையானதும், புகழ் பெற்ற ஆலயமான கங்காதர ஈஸ்வரர் ஆலயம் உள்ளது.

ஒவ்வொரு வருடம் பங்குனி பிரம்மோற்சவ த்தை ஒட்டி தேரோட்டம் நடைபெறும் நிலையில்,

இந்தஆண்டுதேரோட்ட நிகழ்வானது வெகு விமர்சையாக நடைபெற்றது. முன்னதாக கோவில் வளாகத்தில் உள்ள மூலவரு க்கும், அன்னபூரணி அம்மனுக்கும் பால், மஞ்சள்,

தேன், சந்தனம், தயிர் ஆகியவற்றை கொ ண்டு வேத மந்திரங்கள் முழங்க சிறப்பு அபிஷேகங்கள் நடைபெற்றன.

இதனைத் தொடர்ந்து வண்ண மலர்களால் அலங்கரிக்கப்பட்ட தேரினை சுமார் திரளான பக்தர்கள்பங்கேற்றுவடம் பிடித்து இழுத்தனர். நகரின் முக்கிய வீதிகளின் வழியாக தேரோட்டம் நடைபெற்றது.



இராணிப்பேட்டை மாவட்டம் வாலாஜாபேட்டையில் சுமார் 800 ஆண்டுகள் பழமைவாய்ந்த காமாட்சி சமேத ஏகாம்பரநாதர் கோயிலில் ஆண்டுதோறும் பங்குனி உத்திரத்தையொட்டி பிரம்மோற்சவம் நடந்து வருகிறது. அந்த வகையில் இந்த ஆண்டும் கோயிலில் கொடியேற்றத்துடன் பிரம்மோற்சவம் தொடங்கி தினசரி காலை,மாலையில்மூலவர்,பரிவாரதெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் அலங்காரங்கள் மகாதீப ஆராதனைகள் நடந்து வருகின்றன மேலும் உற்சவமூர்த்திகள் மூஷிக , அன்ன , சிம்ம, ஹம்ச, சூரியபிரபை உட்பட பல்வேறு வாகனங்களில் வீதியுலா சென்று பக்தர்களுக்கு அருள்பாலித்தனர். முக்கிய நிகழ்வான தேர்த்திருவிழா நேற்று நடந்தது . தேரில் காமாட்சி சமேதராக ஏகாம்பரநாதர், எழுந்தருளிராஜவீதிகளில் வலம் வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர் விழாவில் சுமார் ஆயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் அரோகரா கோஷமிட்டு தேரை வடமிழுத்துச் சென்றனர்.



தூத்துக்குடி மாவட்ட அதிமுக சட்டமன்ற வேட்பாளர் சி.த செல்லபாண்டியன், ஸ்ரீவைகுண்டம் சட்டமன்ற வேட்பாளர் எஸ்.பி.சண்முகநாதன் ஆகியோர் பாரதிய ஜனதா கட்சி அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் சித்ராங்கதன் தலைமையில் செய்தியாளர்களைசந்தித்தார். உடன் பி.ஜே.பி.மாநில செயற்குழு உறுப்பினர்விவேகம்ரமேஷ், மாநில சிறுபான்மையணி துணைத் தலைவர் JV அசோகன் மற்றும் அ.தி.மு.க. , பி.ஜே.பி கட்சி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டார்கள்.



தூத்துக்குடிசட்டமன்ற தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் வேட்பாளராக கீதாஜீவன் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து தி.மு.க.தலைவர் ஸ்டாலினை சந்தித்து வாழ்த்து பெற்றார்.

# பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள்

பெரம்பலூர், மார்ச். 30 தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு, பெரம்பலூர் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதிகளுக்கான வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு நடைபெற்றபயிற்சி வகுப்புகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் மிருணாளினி பார்வையிட்டார்.




பெரம்பலூர் சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு கோல்டன் கேட்ஸ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும், குன்னம் சட்டமன்ற தொகுதி வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு மேலமாத்தூர் ராஜவிக்னேஷ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியிலும் முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நடைபெற்றது. இரண்டு பயிற்சி மையங்களிலும் மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்ட ஆய்வு செய்தார்.

பெரம்பலூர் சட்டமன்ற தொகுதியில் உள்ள 387 வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் குன்னம் சட்டமன்ற தொகுதியில் உள்ள 345 வாக்குச்சாவடி மையங்களில் தேர்தல் பணியாற்றவுள்ள வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு, அந்தந்த பகுதிகளின் மண்டல அலுவலர்களால் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்புகள் ஏற்கனவே நடத்தப்பட்டது. அதனடிப்படையில், ஏற்கனவே பயிற்சி பெற்ற பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்கான 40 மண்டல அலுவலர்களும், குன்னம் சட்டமன்ற தொகுதிக்கான 35 மண்டல அலுவலர்களும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு பயிற்சி வகுப்பெடுத்தனர்.

இந்த பயிற்சி வகுப்பில், வாக்குப்பதிவு நாளன்று கடைபிடிக்க வேண்டிய விதிமுறைகள், வாக்குப்பதிவு தொடங்கும்போதும், முடிவுறும்போதும் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக அந்தந்த தொகுதிக்கு நியமிக்கபட்டுள்ள மண்டல அலுவலர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களுக்குவிரிவாகஎடுத்துரைத்தனர்.

மேலும், மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களையும், VVPAT கருவிகளையும்எவ்வாறுகையாள்வது என்பது குறித்து மாதிரி கருவிகளை வைத்து விரிவாக எடுத்துரைத்து பயிற்சி அளிக்கப்பட்டது. அதனைத்தொடர்ந்து, அஞ்சல் வாக்கு சீட்டு விண்ணப்பம் பெறுவது குறித்து மண்டல அலுவலர்கள் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கு எடுத்துரைத்தார்.




கன்னியாகுமரி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆர்.அழகுமீனா, (29.03.2026) அன்று பத்மநாபபுரம் சார் ஆட்சியர் அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் முன்னேற்பாடு பணிகள் குறித்து நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் பத்மநாபபுரம் சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் சார் ஆட்சியர் வினய்குமார் மீனா உட்பட பலர் உள்ளார்கள்.



தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, வாக்குச்சாவடிகளில் பணிபுரியவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான முதற்கட்ட பயிற்சி நடைபெறும் மையங்களில் ஒன்றான சேலம் மாவட்டம் அம்மாப்பேட்டை, ஸ்ரீ சக்தி கைலாஷ் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் இரா.பிருந்தாதேவி, (28.03.2026) அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.





தஞ்சாவூர் மாவட்டம் பெரியகோயில் வளாகத்தில் தேர்தல் திருவிழாதமிழ்நாட்டின் பெருவிழா என்னும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் அதிநவீன வீடியோ வாகனத்தில் தேர்தல் விழிப்புணர்வு குறும்படம் "மெய்யின் குரல்" ஒளிபரப்பப்பட்டதை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்காபங்கஜம் நேற்று (29.03.2026) பார்வையிட்டார். சமுக பாதுகாப்பு திட்டம் தனித்துணை ஆட்சியர் சௌமியா, துணை ஆட்சியர் பயிற்சி கமலேஷ், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் அ.பாரதி மற்றும் பலர் உடன் உள்ளனர்.



கடலூர் புனித வளனார் மேல்நிலைப் பள்ளியில், 2026சட்டமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு கடலூர் சட்டமன்ற தொகுதியில் பணியாற்ற உள்ள வாக்குச்சாவடி தலைமை அலுவலர்கள் மற்றும் வாக்குப்பதிவு அலுவலர்களுக்கான முதல் கட்ட பயிற்சி வகுப்பு நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித்தலைவர் சிபி ஆதித்யா செந்தில்குமார் (28.03.2026) அன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.




சேலம், இரயில் சந்திப்பு நிலையத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026ஐ முன்னிட்டு, 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி அமைக்கப்பட்டுள்ள பட்டாம்பூச்சி வடிவிலான செல்பி பாயிண்ட் மூலம் பொதுமக்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, (28.03.2026) அன்று விழிப்புணர்வு ஏற்படுத்தினார்.



தஞ்சாவூர் மாவட்டம் சிவகங்கை பூங்காவில் 2026 சட்டமன்ற பொது தேர்தலை முன்னிட்டு தேர்தல் திருவிழா தமிழ்நாட்டின் பெருவிழா என்னும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி மல்லர் கம்பம் உடல் வித்தை விழிப்புணர்வு நிகழ்ச்சியினை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் பா.பிரியங்கா பங்கஜம் (28.03.2026) அன்று துவக்கி வைத்து பார்வையிட்டார். மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் உடன் உள்ளனர்.

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJAV. CELL: 9443699066